

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 315 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 11 – புதன்கிழமை 25 ஜூன் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 315 : Thiruvalluvar Year - 2056 - Aani 11 - Wednesday 25 June 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம்

# தொழில் வணிகத் துறைக்குத் தேர்வான 50 பேருக்கு பணி நியமன ஆணை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (23.6.2025) தலைமைச் செயலகத்தில், தூய்மை இயக்கம் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், முனைவர் கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) பிரதீப் யாதவ், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டா பி.சந்தர மோகன், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூன் 25-**

**தொழில் வணிகத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 50 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.6.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் தொழில் வணிகத் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 50 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. இவை அளவான முதலீட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கி ஒட்டுமொத்த சமூக பொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பு செய்து வருகின்றன.

தொழில் வணிகத் துறையானது சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு திட்டங்கள், நிறுவனங்களை அமைக்க மற்றும் விரிவாக்கம் செய்வதற்கான மானியங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை தொழில்முனைவோரின் மூலம் தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் வழங்கி பங்காற்றி வருகிறது. தொழில் வணிகத் துறை வாயிலாக கலைஞர் கைவினைத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுதிட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் போன்ற பல்வேறு சுயவேலை வாய்ப்பு மற்றும் தொழில்முனைவுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தொழில் வணிகத் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 19 இளநிலை உதவியாளர், 22 தட்டச்சர் மற்றும் 9 சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மொத்தம் 50 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் 1 உதவி கண்காணிப்பாளர். 11 உதவி இயக்குநர்கள் 18 உதவி பொறியாளர்கள் 47 உதவியாளர்கள் 34 இளநிலை உதவியாளர்கள், 41 தட்டச்சர்கள் மற்றும் 25 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகிய பணியிடங்களுக்கு மொத்தம் 177 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அமெரிக்க தாக்குதலைத் தொடர்ந்து

# இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் தீவிரம்!

### ஏவுகணைகளை வீசியது!

*டெஹ்ரான், ஜூன் 25-*

*ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலை தொடர்ந்து, இஸ்ரேல் மீது ஏராளமான ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.*

*அமெரிக்கா திடீரென ஈரானின் அணு உலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் ஈரான் இடையேயான மோதல் போக்கு காரணமாக ஏற்கனவே, மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் நிலவி வந்த நிலையில் அமெரிக்காவின் தாக்குதல் உலக அளவில் போர் அச்சத்தை உருவாக்கியுள்ளது. அணு ஆயுத அச்சுறுத்தலை குறைக்க தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா கூறியது. இதற்கு ஐ.நா.வில் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் கடும் கண்டனங்களை முன்வைத்தன.*

*அமெரிக்காவின் தாக்குதல் எதிரொலியால், இஸ்ரேல் மீதான தாக்குதலை ஈரான் அதிகரித்துள்ளது. இரவு முழுவதும் இஸ்ரேல் மீது ஏவுகணைகளை ஈரான் வீசியது. இதன் காரணமாக இஸ்ரேல் முழுவதும் அபாய ஒலி ஒலித்து கொண்டே இருந்ததால், மக்கள் தரைத்தளங்கள் மற்றும் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்தனர்.*

*இஸ்ரேலும் ஈரான் ஏவுகணைகளை அழிக்க முயற்சித்தது. ஈரானை நோக்கியும் இஸ்ரேல் குண்டுகளை வீசியதால் இரு நாட்டு மக்களும் பதற்றத்தில் தூக்கமின்றி தவித்தனர்.*

## பாதுகாப்பு அமைப்புகளுக்கான

# ‘ட்ரோன்கள்’ தயாரிப்பதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றுகிறது!

### ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரை!

**சென்னை, ஜூன் 25-**

**முப்படைகள் மற்றும் பிற மின்னணு பாதுகாப்பு அமைப்புகளுக்கான ட்ரோன்களை தயாரிப்பதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றி வருவதாக ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளிதழ் சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்தியா ராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. ட்ரோன் தாக்குதல், பல அடுக்கு வான் பாதுகாப்பு மற்றும் மின்னணுப் போர் போன்ற இராணுவ நடவடிக்கைகளில் தொழில்நுட்ப தன்னிறைவுக்கான ஒரு மைல்கல்லாக ஆபரேஷன் சிந்தூர் இருந்ததாக ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ குறிப்பிட்டுள்ளது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை உள்நாட்டு நிறுவனங்களால் தயாரிக்கப்படும் ட்ரோன்களுக்கான தேவையை கணிசமாக அதிகரித்துள்ளதாகவும், 2030 ஆம் ஆண்டுக்குள் ட்ரோன் சந்தை ஆயிரத்து 100 கோடி டாலர் அளவுக்கு உயரும் என்றும், இது உலகளாவிய ட்ரோன் சந்தையில் 12.2 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதாக இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முப்படைகளுக்கான ட்ரோன்களை தயாரிப்பதிலும், ட்ரோன் ஜாமர்கள் மற்றும் அதிநவீன மின்னணு பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு முக்கிய பங்களிப்பை செலுத்தத் தொடங்கி உள்ளதாகவும் அந்நாளிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், தக்ஷா, கருடா ஏரோஸ்பேஸ், ஜூப்பா ஜியோ நேவிகேஷன், இபிளேன் நிறுவனம், பிக் பேங் பூம், டேட்டா பேட்டர்ன்ஸ் உள்ளிட்ட ஸ்டார்ட்அப் மற்றும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள் உள்ளதாகவும், இந்நிறுவனங்கள், வருங்கால போர் முறைகளுக்குத் தேவையான பல வகை ஆளில்லா விமானங்கள் மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பங்களை உருவாக்கி வருவதாகவும், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பின், இந்நிறுவனங்களின் உற்பத்திக்கான தேவை 5 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் ட்ரோன் உற்பத்தி மையமாக தமிழ்நாடு உள்ளதாகவும், 2022ம் ஆண்டு ட்ரோன் உற்பத்தி ஆலைகளுக்கான கொள்கையை அறிவித்த தமிழ்நாடு அரசு, இதற்கான உள்கட்டமைப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பாராட்டு தெரிவித்துள்ள இக்கட்டுரை, ட்ரோன் உற்பத்தி மட்டுமின்றி, எதிரிகளை வழிமறித்து அழிக்கும் தொழில்நுட்பங்களுக்கான தேவை அதிகரித்துள்ளதாகவும், செயற்கை நுண்ணறிவு அடிப்படையில், இதற்கான தீர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு தொழில்துறை வழித்தடங்களில் ஒன்று தமிழ்நாட்டில் உள்ளதுடன், எம்ஐடி, சென்னை ஐஐடி போன்ற கல்வி நிறுவனங்களின் துடிப்பான ஆராய்ச்சிகள் பாதுகாப்புத்துறைக்கான ட்ரோன் தொழில்நுட்பத்தில் தமிழ்நாட்டுக்கு முக்கிய இடத்தை அளித்துள்ளதாக ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ வெளியிட்டுள்ள சிறப்புக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

